**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 142/பேரூ/2022**

**நாள் : 31.10.2022**

| | | |
|---|---|---|
| திரு மா.செந்தில்ராமலிங்கம்,<br>இரணியல், கன்னியாகுமரி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர், இரணியல் பேரூராட்சி,<br>இரணியல், கன்னியாகுமரி மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர், இரணியல், செக்கால தெரு, கதவு எண்.29/25–ல் வசிக்கும் திரு. மா.செந்தில்ராமலிங்கம் என்பவரின் 05.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2022-ல் பெறப்பட்டு 142/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர், இரணியல், செக்காலை தெரு, கதவு எண்.29/25–ல் வசிக்கும் திரு. மா.செந்தில்ராமலிங்கம் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் இரண்டாம்நிலை பேரூராட்சியில் 15–வது வார்டு உறுப்பினராக மக்கள் பணி செய்து வருகிறேன். இரணியல் இரண்டாம் நிலை

பேரூராட்சியில் செயல் அலுவலர் மற்றும் கணினி இயக்கும் ஒப்பந்த ஊழியர் இருவரும் சேர்ந்து பலமுறை முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக 09.05.2022 அன்று இரணியல் பேரூராட்சி 2–வது வார்டில் முறைகேடான முறையில் எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்பை பற்றி புகார் கடிதம் வாயிலாக நான் செயல் அலுவலரிடம் தெரியப்படுத்தினேன். ஆனால் அன்றைய தினம் முறைகேடாக எடுத்த குடிநீர் இணைப்பை செயல் அலுவலர் தலைமையில் பேரூராட்சி ஊழியர்கள் சென்று துண்டித்தனர். முறைகேடு செய்த நபர்கள் மீதோ அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதோ எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் 11.05.2022 அன்று முதலமைச்சர் தனிபிரிவிற்கு கடிதம் மூலமாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மற்றும் உதவி இயக்குநருக்கும் நேரில் சென்று சக உறுப்பினர்களுடன் புகார் மனுவை அளித்தோம். ஆனால் இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் செயல் அலுவலர் முறைகேடுக்கு துணைபோகும் விதமாக அந்த மே மாதத்திலேயே முறைகேடாக குடிநீர் இணைப்பு எடுத்த திருமதி.வசந்தா என்ற நபருக்கு சிறிய அளவில் பெயருக்கு அபராத தொகை விதித்து அவசர கதியில் ஒரே நாளில் மீண்டும் பேரூராட்சி நிர்வாகம் மூலமாக குடிநீர் இணைப்பை வழங்கினார்கள். இதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே செயல் அலுவலர் அவர்கள் இந்த குடிநீர் இணைப்பிற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அனுமதி அளித்ததின் பெயரிலேயே கொடுத்ததாக கூறி காவல் நிலையத்தில் எங்கள் அழுத்தம் காரணமாக கொடுத்த புகாரையும் வாபஸ் வாங்கினார். இது யாரை காப்பாற்ற செய்த செயல் என்று எங்களுக்கு தெரியவில்லை. மேலும் அந்த இரண்டாம் வார்டில் சட்ட விரோதமாக குடிநீர் இணைப்பு உள்ளது என எனக்கு சந்தேகம் உள்ளது. எனவே, செயல் அலுவலரிடம் புகார் மனு ஒன்றை அளித்தேன். ஆனால் அதற்கு செயல் அலுவலரோ எந்த மேல் நடவடிக்கையும் எடுக்காமல் இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது குடிநீர் இணைப்பு மற்றும் வீட்டு வரி சம்மந்தமான புகார்கள் அனைத்தும் கணினி ஒப்பந்த ஊழியர் திருமதி. ஷாலினி என்பவருக்கு தான் தெரியும் என்று கூறுகிறார். நாங்கள் ஏற்கனவே திருமதி. ஷாலினி அவர்கள் மீது பல புகார்கள் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத செயல் அலுவலர் எந்தவித தகவலானாலும் அவரிடமே கேட்டு பெற்று கொள்ளுங்கள் என்று பொறுப்பற்ற முறையில் பதிலளிக்கிறார். மேலும் மன்ற சாதாரண கூட்டத்தின் போது வரவு செலவு கணக்கு சரியான முறையில் மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது கிடையாது. முறையான ரசீது கேட்டால் ரசீது உங்களிடம் காண்பிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று அலட்சியமாக பதில் கூறுகிறார். மேலும் இவர்கள் இருவரும் சேர்ந்து பல முறைகேடுகளை செய்து வருவதாக எங்களுக்கு சந்தேகம் உள்ளது. திருமதி. ஷாலினி என்பவர் 20 வருடங்களாக இதே அலுவலகத்தில் பணி புரிந்து வருவதால் அவர் இந்த பேரூராட்சியின் செயல் அலுவலரைப்போல செயல்பட்டு வருகிறார். ஆகையால் திருமதி.ஷாலினி என்பவரை வேறு பேரூராட்சிக்கு பணியமர்த்த வேண்டுமென இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு தாங்கள் முறையான விசாரணை செய்து துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி இரணியல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 25.08.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 19.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 28.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 28.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் பேரூராட்சியில் செயல் அலுவலர், கணினி இயக்குபவர் மற்றும் பணியாளர்கள் சேர்ந்து பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரணியல் பேரூராட்சி 2–வது வார்டில், முறைகேடாக குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு, பின்னர் புகாரின் மீதான நடவடிக்கையாக மேற்கண்ட இணைப்பு துண்டிக்கப்பட்டு, அதன் பின்னர் முறையாக வீட்டு உரிமையாளரால் குடிநீர் இணைப்பிற்கான கட்டணம் செலுத்தப்பட்டு மீண்டும் அங்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. முன்னர் முறைகேடாக இணைப்பு வழங்கிய பிளம்பர், வீட்டு உரிமையாளர் ஆகியோர் மீது முறையாக நடவடிக்கையோ அல்லது அபராதமோ விதிக்கப்படவில்லை. அதேபோன்று மேற்கண்ட 2–வது வார்டில், மேலும் பல முறைகேடான இணைப்புகள் உள்ளன. குடிநீர் மற்றும் சொத்துவரி போன்ற முறைகேடுகளுக்கு கணினி இயக்குபவர் உடந்தையாக உள்ளார் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இரணியல் பேரூராட்சி கவுன்சில் கூட்டத்தின்போது வரவு செலவு விவரங்கள் என்னால் கோரப்பட்டது. ஆனால், பேரூராட்சி செயல் அலுவலரால் எனக்கு அவ்விவரங்கள் அளிக்கப்படவில்லை. எனவே, குடிநீர் இணைப்பு முறைகேட்டிற்கு காரணமான செயல் அலுவலர், கணினி இயக்குபவர் மற்றும் அங்குள்ள பிளம்பர் ஆகியோர் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றத்திற்கு என்னால் அளிக்கப்பட்ட 5.8.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

5)செயல் அலுவலர், இரணியல் பேரூராட்சியை 11.10.2022 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது. இரணியல் பேரூராட்சி செயல் அலுவலர் 11.10.2022 அன்று சென்னையில் நடைபெறும் செயல் அலுவலர்களுக்கான பயிற்சியில் கலந்து கொள்வதால் அவரது சார்பாக இரணியல் பேரூராட்சி இளநிலை உதவியாளர் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்:

" மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு இரணியல் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கியதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. மேலும் மனுதாரர் கேட்டுக்கொண்டவாறு வரவு செலவு குறித்த கணக்குகளை அவர் கேட்கும்போது, அவரிடம் மன்றக் கூட்டத்தின்போது பேரூராட்சி அலுவலர்களால் கொடுக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு

தொடர்பாக இரணியல் பேரூராட்சி செயல் அலுவலரின் 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6) இரணியல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.10.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" நாகர்கோவில் மண்டலம் கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் பேரூராட்சிக்குட்பட்ட 2வது வார்டு ஆழ்வார்கோவில் என்னும் ஊரில் திருமதி.வசந்தா என்பவர் முறைகேடாக குடிநீர் இணைப்பு எடுத்துள்ளார் என பேரூராட்சி குடிநீர் பணியாளர் தந்த புகாரின் அடிப்படையில் செயல் அலுவலராகிய நானும் எனது அலுவலக பணியாளர்களும் மேற்படி இடத்தை சென்று பார்வையிட்டோம். அப்போது முறைகேடாக குடிநீர் இணைப்பு எடுத்துள்ளது தெரிய வந்தது. உடனடியாக பணியாளர்களை வைத்து குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதில் பிரச்சினை ஏற்பட்டதால், இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். பின்னர் எனது உயர் அலுவலராகிய பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் முறைகேடான குடிநீர் இணைப்பு பற்றி கூறினேன். அப்போது உதவி இயக்குநர் அவர்கள் அலுவலக அனுமதியின்றி குடிநீர் இணைப்பு எடுத்ததற்கு உரிய அபராதம் விதித்து உரிய விதிமுறைகளின்படி கட்டணம் வசூல் செய்து பின்னர் குடிநீர் இணைப்பு வழங்க அறிவுரை கூறினார்கள். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை அரசாணை எண்.65 நாள் 12.04.2010ன்படியும் திருமதி வசந்தா என்பவரிடம் செல்லான் எண்.41/2022–2023 நாள் 18.05.2022ன்படி ரூ.15000/–ம் செல்லான் எண்.62/2022–2023 நாள் 24.05.2022 –ன்படி ரூ.5500/– ம் ஆகமொத்தம் ரூ.20,500/– வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை வசூல் செய்யப்பட்ட பின்னரே புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் வேறு எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை. இரணியல் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகாரை நாளது தேதிவரை வாபஸ் வாங்கவில்லை.

மேலும் 2வது வார்டில் குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் பணியாளர் வேறு எந்த முறைகேடான குடிநீர் இணைப்பும் இல்லை என கூறியுள்ளார். அலுவலகத்தில் ஒப்பந்தப் பணியாளராக பணிபுரிந்து வரும் கணினி இயக்குபவருக்கு குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக எவ்வித தொடர்பும் இல்லை. மேலும் ஒப்பந்தப்பணியாளராகிய கணினி இயக்குபவர் உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்கள், செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் சொல்லும் பணிகளை மட்டுமே செய்து வருகிறார். அவரால் தன்னிச்சையாக எவ்வித முடிவும் எடுக்க முடியாது. வீட்டுவரி, குடிநீர் கட்டண வசூல் மற்றும் அலுவலக வேலைகள் தொடர்பாக எவ்வித தகவல்களாக இருந்தாலும் செயல் அலுவலரால்

பதிலளிக்கப்பட்டு வருகிறது. மன்ற கூட்டத்தில் வரவு செலவு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மன்ற கூட்டம் நடைபெறும் போது செயல் அலுவலர், இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். வேறு எவ்வித பணியாளரையும் மன்ற கூட்ட அவைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

செயல் அலுவலராகிய நான் 08.11.2021 முதல் இப்பேரூராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். ஒப்பந்தப்பணியாளராகிய கணினி இயக்குபவர் 15.09.2004 முதல் மாத ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார். இதுவரை கணினி இயக்குபவரை பற்றி எந்த ஒரு புகாரும் இல்லை. இந்த புகாரானது செயல் அலுவலர் மற்றும் கணினி இயக்குபவரை பழிவாங்கும் எண்ணத்துடன் உண்மைக்கு மாறாகவும் அனுப்பப்பட்டதாகும் என்ற விபரம் இதன் மூலம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், இரணியல் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் இரணியல் பேரூராட்சியின் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் தனது புகார் மனுவில் கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் பேரூராட்சியில் செயல் அலுவலர், கணினி இயக்குபவர் மற்றும் பணியாளர்கள் சேர்ந்து பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரணியல் பேரூராட்சி 2–வது வார்டில், முறைகேடாக குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு, பின்னர் புகார் பெறப்பட்டதன் காரணமாக மேற்கண்ட இணைப்பு துண்டிக்கப்பட்டு, அதன் பின்னர் முறையாக வீட்டு உரிமையாளரால் குடிநீர் இணைப்பிற்கான கட்டணம் செலுத்தப்பட்டு மீண்டும் அங்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. முன்னர் முறைகேடாக இணைப்பு வழங்கிய பிளம்பர், வீட்டு உரிமையாளர் ஆகியோர் மீது முறையாக நடவடிக்கையோ அல்லது அபராதமோ விதிக்கப்படவில்லை. அதேபோன்று மேற்கண்ட 2–வது வார்டில், மேலும் பல முறைகேடான இணைப்புகள் உள்ளன. குடிநீர் மற்றும் சொத்துவரி போன்ற முறைகேடுகளுக்கு கணினி இயக்குபவர் உடந்தையாக உள்ளார். மேலும், இரணியல் பேரூராட்சி கவுன்சில் கூட்டத்தின்போது வரவு செலவு விவரங்கள் மனுதாரரால் கோரப்பட்டும் பேரூராட்சி செயல் அலுவலரால் அவ்விவரங்கள் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்து குடிநீர் இணைப்பு முறைகேட்டிற்கு காரணமான செயல் அலுவலர், கணினி இயக்குபவர் மற்றும் அங்குள்ள பிளம்பர் ஆகியோர் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

இரணியல் பேரூராட்சிக்குட்பட்ட 2வது வார்டு ஆழ்வார்கோவில் என்னும் ஊரில் வசிக்கும் திருமதி.வசந்தா என்பவர் முறைகேடாக குடிநீர் இணைப்பு எடுத்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை அரசாணை எண்.65 நாள் 12.04.2010ன்படியும் திருமதி. வசந்தா என்பவரிடம் செலுத்துசீட்டு எண்.41/2022–2023 நாள் 18.05.2022படி ரூ.15,000/– ம் செலுத்துசீட்டு எண்.62/2022–2023 நாள்

24.05.2022படி ரூ.5500/– ம் ஆக மொத்தம் ரூ. 20500/– வசூல் செய்யப்பட்ட பின்னரே புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது. இரணியல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நாளது தேதி வரை வாபஸ் வாங்கவில்லை என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

மேலும் 2–வது வார்டில் வேறு எந்த முறைகேடான குடிநீர் இணைப்பும் இல்லை என்பதும் அலுவலகத்தில் ஒப்பந்தப்பணியாளராக பணி புரிந்து வரும் கணினி இயக்குபவருக்கு குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக எவ்வித தொடர்பும் இல்லை என்பதும் ஒப்பந்தப்பணியாளராகிய கணினி இயக்குபவர் உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்கள், செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் சொல்லும் பணிகளை மட்டுமே செய்து வருகிறார். அவரால் தன்னிச்சையாக எவ்வித முடிவும் எடுக்க முடியாது என்பதையும், வீட்டுவரி, குடிநீர் கட்டண வசூல் மற்றும் அலவலக வேலைகள் தொடர்பாக எவ்வித தகவல்களாக இருந்தாலும் செயல் அலுவலரால் பதிலளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

மன்ற கூட்டத்தில்வரவு செலவு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மேலும், மன்ற கூட்டம் நடைபெறும் போது செயல்அலுவலர், இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். வேறு எவ்வித பணியாளரையும் மன்ற கூட்ட அவைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் இரணியல் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மனுதாரரின் மனுவின் மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்க இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் இரணியல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முறைகேடாக அனுமதியற்ற இணைப்புகள் தொடர்பாக குழு அமைத்து களஆய்வு மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவும், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தடுக்கவும், இரணியல் பேரூராட்சி செயல் அலுவலர் முனைப்பாக செயல்பட இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும் கள ஆய்வின்போது முறைகேடான அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அதற்கு காரணமான சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்கிறது.

முறைகேடான இணைப்பு வழங்க உடந்தையாயிருந்த குழாய் பொருத்துநர், பிளம்பர் மீதும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. அதைப்போல் முதலில் முறைகேடாக இணைப்பு வசதி பெற்ற வீட்டு உரிமையாளர் மீது துறை சார்பு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாக இல்லை. அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதும் தெரிவிக்கவில்லை. முறைகேட்டுக்கு உடந்தையாயிருந்த பொருத்துநர் மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். முறைகேடாக வழங்கப்பட்ட இணைப்புகள் இல்லை என செயல் அலுவலர் கூறினாலும் நடுவம் அதை ஏற்கத் தயாரில்லை. மறுபடியும் அப்பகுதியில் உள்ள வீடுகளை தணிக்கையிட்டு

பேரூராட்சி அனுமதியின்றி அங்கீகாரமற்ற இணைப்புகளை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. வரவு செலவு கணக்குகளை செயல் அலுவலர் மன்ற உறுப்பினரிடம் காட்டியிருந்தால் அவர் இந்தக் குற்றச்சாட்டை ஏற்படுத்தத் தேவையில்லை.

The District Collector, Kanniyakumari being the controlling authority is instructed to ensure that the E.O. of Eraniel Town Panchayat acquits herself above board without fear or favour and impartial and neutral in the discharge of her duties without giving room for such complaints and grievances by an elected member of the Town Panchayat council. The E.O. is to be directed to show and share the accounts details of the Town Panchayat during any specific period after the constitution of the present elected Council to the petitioner. Recurrence of similar complaints from the other Town Panchayats of Kanniyakumari District may be avoided if appropriate instructions are issued by the District Collector to all Executive Officers of the District during the monthly review meetings and by circular instructions. The conduct of the E.O. Town Panchayat Eraniel is censured by this Forum. The District Collector is further instructed to observe such aberrations on the part of the E.Os in general and initiate corrective measures to check and curb the same.

2022-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு மா.செந்தில் ராமலிங்கம்,
   15–வது வார்டு உறுப்பினர்,
   29/25, செக்காலை தெரு,
   இரணியல், நெய்யூர் அஞ்சல்,
   கன்னியாகுமரி மாவட்டம்.
2. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
   நகர நிர்வாக அலுவலகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
3. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   கன்னியாகுமரி மாவட்டம்,
   கன்னியாகுமரி.

4. இணை இயக்குனர்(பொது)
   மற்றும் ஒருங்கிணைப்பு அலவலர்(Nodal Officer)
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
   நகர நிர்வாக அலுவலகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்)
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கன்னியாகுமரி மாவட்டம்,
   கன்னியாகுமரி.
6. செயல் அலுவலர்,
   இரணியல் பேரூராட்சி,
   இரணியல்.
   கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

03/11/22
செயலாளர்

7/11/2022